உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } பரீதாபி ஹு ஆடி மீ { பகுதி ௪.

## பிரசங்கமும் வியாசமும்.

சென்னை முதல் தூத்துக்குடி வரை 3 ஹு காலமாக அநேக நகரங்களில் சபைகளும் பிரசங்கங்களும் நடைபெறுகின்றன. ஜனங்களுக்குள் முன்னில்லாத ஒருவித பரபரப்பு இவ்விஷயத்தில் தோன்றி யிருக்கின்றது. இது மிகவும் நல்லகாரியமேயாகும். இதுபோலவே பத்திரிகைகட்கு வியாச மெழுதுவதற்கும் பலர் முற்படுகின்றனர். இதுவும் நன்றே. சபையில் பேசுவதற்கும் பத்திரிகையில் எழுதுவதற்கும் நம்மவர்கட்குப் பிரியஞ் சனிப்பது பிற்காலத்தார் க்ஷேமத்துக்குப் பெரிதும் துணையாகும். ஆனால் "செய்வினை திருந்தச்செய்" என்ற ஔவைப்பிராட்டியாரின் அமுத வாக்கை ஒவ்வொருவரும் எக்காரியத்திலும் மறக்கவொண்ணாது. காரியத்தில் பிரவர்த்திப்பவர் யாவராயினும் இத்திருவாக்கை நினைத்துக்கொண்டே தொடங்குவாராயின் அக்காரியத்தால் தமக்கும் பிறர்க்கும் நன்மையுண்டாமென்பது நிச்சயம். இதனை யுணராது பொறாமையாலும், ஆசையாலும் தம்மாலாகாத காரியத்திற் பிரவர்த்தித்துச் சிலர் முட்டுப்படுகின்றனர். நாமும் சபையேறிப் பேசிவிடவேண்டும் என்று சிலர் கிளம்புகின்றனர். சபையில் எழுந்ததும் இன்னவாறு தொடங்கி யின்னவாறு முடிப்பது என்று யாது

மறியாது விழிக்கின்றார்கள். இச்சமையம் இவர்க்குத் துணைசெய்வது அவையடக்கமே. என்னை? பிரசங்கத்துக்கு நியமித்தகாலம் 30 நிமிஷம் என்றால் 25 நிமிஷம் அவையடக்கங் கூறிவிட்டு எடுத்தவிஷயம் பேசுதற்கு நேரம் இல்லையே என்செய்வேன் என்று சொல்லிமுடித்து விடுகின்றார். இன்னும் சிலரோ தோத்திரமாகத் தமக்குப் பாடமுள்ள கவிகளை யெல்லாங்கூறிப் பொழுது போக்குகின்றார்கள். மற்றுஞ் சிலர் தோத்திரக் கவிகளையோ சுலோகங்களையோ கூறிப் பொருள்விரிக்க ஆரம்பிக்கின்றனர். இவைகளெல்லாம் கற்கவேண்டிய நூல்களைமுறையாகக் கற்காமையால் விளைவன. வேறு சிலரோ ஆண்களும,பெண்களும் நிறைந்த சபையில் *இடக்கரடக்கல் இன்னதென் றறியாது விஷயத்தாலும் சொற்களாலும் தகாதவற்றை யுரைத்து அருவருப்பை விளைத்து விடுகின்றார்கள். இவர்களெல்லாம் பண்டிதரென்ற பட்டத்தைக் கட்டிக்கொள்ள விருப்பமுள்ளவர்களே யன்றி கட்டிக்கொண்டவர்களல்லர். பண்டிதரென்று பட்டங் கட்டிக்கொண்டு வருபவருள்ளுஞ் சிலர் பிரசங்க முறையறியாராகின்றனர். "தாங்கள் எதைப்பற்றி யுபந்யசிக்கிறீர்கள்? எதையாவது வைத்துக்கொள்வோம். ஆனாலும் ஒரு பேரைக் கூறுங்கள். நீங்கள்தான் கூறுங்களேன். இல்லை தாங்களே கூறுங்கள். நான்தான் சொன்னேனே. எதை வேண்டுமானாலும் பேசலாம். ஞானத்தைப்பற்றிப் பேசுகிறீர்களா? ஞானமா, (தலையசைத்து) நு, இதைப்பற்றி யிப்போதே யென்ன, பேசுகிறபோது பார்ப்போமே. சரி தங்கட்கு எவ்வளவுநேரம் வேண்டும்? எவ்வளவு நேரமானாலுஞ் சரி, அவர்களுக் கெவ்வளவுநேரம். அரை மணி. எனக்கும் அரைமணிதான், என்னமோ ஒருத்தருக்கற்றபடி நமக்குமாகட்டுமே. தாங்கள்தான் முதலில் பேசவேண்டும். இல்லை அவர்கள்தான் ஆகட்டும் அல்லது நீங்களாகட்டும்." என இவ்வாறு பேசுகிற வித்துவான்களு மிருக்கின்றார்கள். எடுத்தவிஷயத்தை விட்டு அநாவசியமான கதைகளைச் சொல்லிப் பொழுதுகழித்துவிட்டு "ஐயையோ நேரமாயிற்றே, இன்னம் ஒருமணிநேரம் வேண்டும், ரெம்பப் பெரியவிஷயம், இதைப்பற்றி 3 நாள், இல்லை; 30 நாள் வேணுமானாலும் பேசலாம். எனக்கு எப்படியாவது தயவுசெய்து ஒரு மணி கொடுக்கவேண்டும். நான் ரெம்ப ஆசையோடு வெகுதூ

* சொல்லத்தகாததை வேறுசொல்லாற் சொல்லுதல்.

ரத்திலிருந்து வந்திருக்கிறேன். நல்லவிஷயம் ஒரு மணி கொடுங்கள்" என்று கெஞ்சுவா ரொருசிலர். பிரசங்கத்தை நிறுத்துங்களென்பதற் கறிகுறியாக ஜனங்கள் கைதட்டியும், வாயாற்சொல்லியும், ஆரவாரித்தால் அதனை தமது பிர்சங்கத்தில் ஜனங்கட் குளதாகிய விருப்பம் வெளிப்படுவதாகக் கொண்டு மேலும் பொழுது கழிப்பர் சிலர். இவர்களெல்லாம் பலமுறை சபைகளிற் சென்று தக்கார் பிரசங்கங்களைக் கேட்டு தாமும் அவர்கள் போற் செய்யப் பழகி அதன் பின்னர் அவையேறல் நன்று.

உபந்யசிப்பவர் சபையில் எழுந்து கடவுளைத் தியானித்து அவைக்கு அடங்கி தாம் எடுத்தவிஷய்த்தை முன்னரே தம் மனத்தில்பாகுபடுத்திவைத்து இனியதொனியுடனும்மதுரமொழியுடனும் முன்பின் முரணுமல் தக்க உதாரணங்களை அவசியமானபோது கூறிப் பிரசங்கிக்கவேண்டும். சபையோர் அமைதி குறையுமாயின் பிரசங்கம் சபையால் விரும்பப்படவில்லையென்று உணரவேண்டும். குறித்தகாலத்துக்குள் எடுத்தவிஷயத்தை முடிக்கத்தக்க நிலையில் பாகுபாடுசெய்து அளவுடன் பேசவேண்டும். தாம் கூறும் எந்த விஷயமும், எந்தக்கதையும் எடுத்த விஷயத்தோடு சம்பந்தப் பட்டனவாக்ச் சபைக்குத் தெளிவுறத் தெரியும்படி கூறவேண்டும். சபையோர் யாவரிடத்தும் தமதுபார்வையைச் செலுத்தவேண்டும். முகமலர்ச்சியும், சமையத்துக்கேற்ப வலியுறுத்தல், இரக்கம், அநுதாபம், கோபம், அருவருப்பு, மகிழ்ச்சி முதலிய மெய்ப்பாடுகளும், தோன்றுமாறு ஆங்காங்கு ஏற்ற சொற்களையே யுபயோகிக்கவேண்டும். எழுவாய் பயனிலை பாதிய இலக்கணமுறை வழுவாமல் காக்கவேண்டும். இவ்வாறு பிரசங்கஞ் செய்வார்களாயின் சபையாரை வசீகரிப்பது நிச்சயமாகும். சபையைத் தன் வசப்படுத்தாத பிரசங்கத்தால் யாதொரு பயனு முண்டாகாது: வீண்காலப் போக்காகவே முடியும். இதனால்தான்

" விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்றார். பொய்யில்புலவர்.

இனி வியாசமெழுதுவதைப் பற்றிச் சிறிது ஆராய்வாம். பத்திரிகைகளில் வியாசம் எழுதுபவர்கள் எழுதுவதற்கு முன்னமே எடுத்த விஷயத்தைப்பற்றி நீள நினைந்து ஆன்றோர் கொள்கைக்கு மாறுபடாமலும், படிப்பவர்க்கு அறிவைத் தருவதாகவும், படிக்கும்போது மகிழ்ச்சியை விளைப்பதாகவும், பிறர் யாருக்கும் துவேஷத்தை விளைக்காததாகவும், இலக்கணப்பிழை இல்லாமல் நல்ல சொற்களைப் புணர்த்தியும் எழுதவேண்டும். எதையும் நன்கு ஆராய்ந்து துணிந்து எழுதவேண்டும். பயனற்ற விஷயங்களைப் பலபடவிரித்துப் பக்கங்களை நிரப்பலாகாது. யார்க்கும் பொருள் விளங்கும்படி தெளிவான செந்தமிழ் நடையில் எழுதவேண்டும். நவீனகொள்கைகளை விளக்கவிரினும் பிராசீன கோட்பாடுகட்கும் இவற்றுக்குமுள்ள தாரதம்மியம் இன்னவென்று மரியாதை முறை கடவாமல் "ஞயம்பட வுரை" யென்ற முதுமொழியைப் பின்பற்றி யெழுதவேண்டும். சிலர் தத்தம் மனம்போனவாறு என்னென்னவோ எழுதித் தமது காலத்தையும், பிறர் காலத்தையும், வீணாக்குகின்றனர்.

பிரசங்கிக்கவும் வியாசம் வரையவும், தொடங்கும் மித்திரர்கள் மேற்கூறியவற்றைச் சிந்தித்து தங்கள் மனமுயற்சியால் உலகிற்கும் தங்கட்கும் நன்மையுண்டாகும்படி நிறுத்தமொழியாற் குறித்தபொருள் விளக்கிப் புகழ்பெற்று வாழ்வார்களாக:

சுபம்!

பத்திராதிபர்.

---

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# ஆன்ம இலக்கணம்.

இது ஆன்ம + இலக்கணம் என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒருதொடர்மொழி. இவற்றுள் முன்னைய ஆன்ம சப்தம் ஜீவான்மா, பரமான்மா இரண்டனையுங் குறிக்கும். ஜீவான்மாவைக் குறிப்பது சித்தாந்தமும் பரமான்மாவைக் குறிப்பது வேதாந்தமுமாம். ஈண்டு சித்தாந்த வழக்கின்படி ஜீவான்மாவே பொருளாம். பின்னைய இலக்கணம் என்னும்சொல் தன்மை என்பதைக் குறித்து நிற்கும். ஆகவே ஆன்மாவின் தன்மை என்பது பொருளாம். இன் சாரியை தொகை.

தனுகரண புவன போகமென்னும் அறிவில்லாத சடப்பொருள்கள் நான்கனுள் தனுகரணங்களை யான் எனதென்றும், புவனபோகங்களை யெனதென்றும் அபிமானித்து உடல்தோறும் நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய், அறிவுடையதாய் ஒரு பொருள் உண்டென்று அனுமான அளவையாலறியப்படும். இதுவே உயிராம். இப்பொருள் அறிவுடையதாயினும் முன் சென்றதையும், பின் வருவதையும், நிகழ்காலத்து வந்ததொன்றை இதனால் வந்ததென்பதையும் அறிதல் கூடாமையால் அறிவித்தா லறியுந்தன்மையுடையதெனப் பெறும். பெறவே. அறிவிப்பான் ஒரு இறைவன் வேண்டப்படும். அவ்விறைவன் முற்றறிவுடையவனாய் உயிர்தோறும் அந்தரியாமியா யிருந்தாலன்றி உயிர்களின் கன்மத்திற்கீடாக தனுகரண புவன போகங்களைக் கூட்டிவைக்கவும் உயிர்கள் அறியவும் இயலாது. இதுபற்றியே.

> எண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிதொறுங்
> கண்பொதிந்த சீவர் கருத்துள்ளே—பண்பொதிந்த
> தேவியொடு மீசன் செறிந்திரா னேயாகி
> னாவி யொன்றை யுற்றறியா தாம்.

என்றார் சிவஞான வள்ளலாரும். அங்ஙனமாயினும் தனுகரண புவன போகங்களின் கட்டுப்பாட்டால் அந்தரியாமியாகிய இறைவனை உயிர்கள் அறியாது வருந்தும். அக்கட்டு நீங்குங்கால் அறிந்தின்புறும். ஆகவே இறைவன், உயிர், கட்டு அல்லது பாசம் என்னு

மூன்று பொருள்களுண்டென்பதை அனுமான அளவையாலும், காட்சி அளவையாலும் ஆஸ்திக சமயம்யாவும் ஒப்புக்கொள்ளும். ஒப்புக்கொள்ளினும் இறைவனுக்குரிய முழு இலக்கணமும் அமையப்பெறுதாலே இறைவனென்றும் உயிர்க்கு உரிமையில்லாத இலக்கணத்தை யுயிர்க்குண்டென்றும், பாசத்தின் இலக்கணங்களை முறைபிறழவும் கூறும் சமயங்கள் பல. அவ்வாறன்றி அம்முப்பொருள்களின் இலக்கணங்களை உள்ளவாறு கூறுவது சைவசமயமேயாம். இம் முப்பொருள்களுக்கும் சொரூப இலக்கணமெனப்படும் சிறப்பு இயல்பும், தடத்த இலக்கணம் எனப்படும் பொது இயல்பும் என இரண்டு இயல்கள் தனித்தனி உண்டென்று சைவசமயங் கூறும்.

சிறப்பு இயல்பாவது நிலைபேறுடைய இயற்கைத் தன்மை. பொது இயல்பாவது தோன்றி யொடுங்குஞ் செயற்கைத் தன்மை. இலக்கண நூல்கள் ஒரு பொருளுக்கே உரியதன்மை சிறப்பென்றும், பல பொருளுக்குரியதன்மை பொதுவென்றுங் கூறும். மேற்கூறியவாறு ஒரு பொருளொருதன்மையாகவும் இருதனமையாகவு மிருக்கும் வேறுபாட்டினால் சிறப்பியல், என்றும் பொதுவியல் என்றும் கூறுஞ் சித்தாந்த சாஸ்திர வழக்கிற்கும், இலக்கணநூல் வழக்கிற்கும் வேற்றுமையுண்டென் றறியவேண்டும். இங்ஙனங் கூறிய பொதுவியல்பு தோன்றி யொடுங்குமென்றதனால் ஆதியன்று அனுதியேயாம். இதுபற்றியே "பதியினைப்போற் பசுபாசமனுதி" யென்றருளிச் செய்தார் திருமூல நாயனரும். இவ்வா றிரண்டிலக்கணங்களையுடைய இறைவன்,உயிர்,பாசம் என்னுமுப்பொருள்களுள் நடுநின்ற உயிர்ப்பொருளாகிய ஆன்ம இலக்கணத்தைப்பற்றி ஈண்டு விசாரிப்பாம். ஆன்மா அளவில்லாதன. அறிவு, இச்சை, செயல் என்னு மூன்று சக்திகளையுடைய சித்துப்பொருள். ஆயினும் சுதந்தரமா யொன்றையு மறியாது. எது போலவெனின், கண்ணுக் கொளியிருந்தும் சூரியன் சந்திரன் அக்கினியின் பிரகாசங்களின் உதவியையின்றிப் பொருள்களைத் தெரியமாட்டாதது போலெனக. அம்மூன்றின் ஒன்றினுதவியைக்கொண்டு ஒளியுடைய கண் பொருள்களைத் தெரிவதுபோல அறிவுடைய ஆன்மாவும் பரமான்வாகிய சிவபெருமானுல் அறிவிக்க அறியும். கண் ஒளி

தொழிற்படுதற்கு மாத்திரமேயன்றிப் பொருள் விளங்குவதற்குஞ் சூரியாதிப் பிரகாசம் வேண்டப்படுவதுபோல, ஆன்மா அறிதலைச் செய்தற்கு மட்டுமேயன்றிப் பொருள்களறியப்படுதற்கும் அவற்றினு மிறைவன் வியாபித்திருக்கவேண்டும். இவ்வாறு உயிரினும் விடயத்தினும் வியாபித்திருத்தலோடு உயிரொன்றனை யறிவதற்குத்தா னுடனிருந்து அறியவும் வேண்டும்; அறிவித்தலைச் செய்வது காட்டு முபகாரமென்றும், அறிதலைச் செய்வது காணு முபகாரமென்றுங் கூறப்படும்.

பளிங்கு அடுத்ததன்வண்ணமாய் விளங்குமாறு போலவும், கண் ஒளியானது ஒளியொடுகூடி ஒளியாயும் இருளொடுகூடி இருளாயும் விளங்குவதுபோலவும், ஆன்மாவும் பாசத்தோடு கூடிப் பாசமாயும், பதியொடுகூடிப் பதியாயும், இவ்வாறு சார்ந்ததன்வண்ணமாய் வியாபித்து நிற்கும் சதசித்தாந்தன்மை யுடையது. பாசத்திற் கூடி நிற்கும்போது பசு எனவும், பதியொடுகூடி நிற்கும்போது ஆன்மா வெனவும் பெயர்பெறும். பதியும் பசுவும் வியாபகமாய் இருக்கக்கூடுதலுங் கூடாமையு மெவ்வாறு பொருந்துமெனின் ஈண்டு கூடுதல் கூடாமை யென்பதற்கு உட்பட்டும், முற்பட்டும் இருத்த லென்று பொருள்கொள்ளவேண்டும். பாசத்தோடு நிற்குங்கால் உட்பட்டும் பதியோடு நிற்குங்கால் முற்பட்டும் பதி விளங்கும். பதியோடுகூடி அதனுளடங்கி யிருக்குந்தன்மையே சொரூப இலக்கணமாகிய சிறப்பு இயல்பு. பாசத்தோடுகூடிப் பதியை யுட்படுத்தி நிற்குந் தன்மை தடத்த இலக்கணமாகிய பொதுவியல்பாம். சொரூப இலக்கணம் இயற்கையும் தடத்த இலக்கணம் செயற்கையுமாம்.

சொரூப இலக்கணத்தையுடைய ஆன்மாவிற்குச் செயற்கையான பாசம் நெல்லுக்குமியும், செம்பிற்குக் களிம்பும் போல அநாதியே பொருந்தியிருக்கும். இப்பாசம் ஆணவம், கன்மம், மாயை யென முத்திறப்படும். அவற்றுள் ஆணவமலம் ஒன்றே யுடையவான்மா விஞ்ஞானகல ரென்றும், ஆணவம், கன்மம், இரண்டுமுடைய ஆன்மா பிரளயாகலரென்றும், ஆணவம், கன்மம், மாயை மூன்று முடைய வான்மா சகலரென்றும் பெயர்பெறும். கலர் என்பது பாசத்தைக் குறிக்கும். சகலரென்றபோது எல்லாப் பாசமும் என்ற பொருள் கிடைக்கும், ஆதலால் மும்மலமுடையர்

சகலரென்றாயிற்று. பிரகிருதி மாயா காரியங்கள் பிரளயமாயொடுங்கி அசுத்தமாயா புவனத்திற் போகம் புசித்துக்கொண்டிருக்கையிற் பிரகிருதி மாயைப் பிரளயமாயும் போகம் புசித்தற்குரிய கன்மமலம் ஆணவமல மிருத்தலால், இவ்விரு மலமுடையாருக்குப் பிரளயாகலரெனப் பெயராயிற்று. அசுத்த மாயா புவனங்களும் நீங்கிச் சுத்தமாயா புவனத்தில் சுகதுக்காதிக் கேதுவான விருப்பு வெறுப்பின்றி ஞானபரனாய்த் தான் ஒரு முதலென நிற்கும்போது ஞான முதயமாயும் தான் முதலன்றென நில்லாமையா லொருமல முடைய விஞ்ஞானகலரெனப் பெயராயிற்று.

இன்னும் சகலரில் இம்மூவகையு முண்டென்று கூறுதலு முண்டு. அதாவது ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்னும் முப்பத்தாறு தத்துவங்களோடு கூடி நிற்கும்போது மும்மல முடைய சகலரென்றும், போக்கிய காண்டமாகிய ஆன்ம தத்துவம் நீங்க போககாண்டமாகிய வித்தியா தத்துவமும், பிரேரக காண்டமாகிய சிவதத்துவமும் பொருந்தியிருக்குங்கால் இருமல முடைய பிரளயாகலரென்றும், வித்தியாதத்துவமு நீங்க சிவதத்துவத்தோடு பொருந்தி நிற்குங்கால் ஒரு மலமுடைய விஞ்ஞானகலரெனவுங் கொள்ளப்படும்.

இவ்வான்மா பாசத்தைப் பற்றுதலாலும், விடுதலாலும் கேவலம், சகலம், சுத்தமென மூன்றவத்தைகளைப் பொருந்தும். அவை வருமாறு, ஆணவமலம் ஒன்றேபற்றி அறிவு, இச்சை, செயல்கள் தொழிற்படாமல் இருட் டறையிற் குருட்டுச் சிசுப்போல வருந்துவது கேவலா வத்தை. இதனை

"சனாதக் குருட்டுச் சந்ததி யிருட்டறை
வாய்ப்பட் டாங்கு மலவாய்ப் பட்டுப்
பன்னா ளழுங்கிப் பருவர லுழக்கு
மனாதி கேவலத் தாருயி ரம்ம"

என்னும் ஆன்றோர் வாக்கியத்தா லுணர்க. ஒரு மலத்தால் அறிவிச்சை தொழில்கள் நிகழப்பெறாது, அவத்தைப் படுதலின் கேவலாவத்தை யெனப் பெயராயிற்று. (இன்னும் வரும்).

பொ. மூ. முத்தையபிள்ளை.

## சன்மார்க்க சபையின் மூன்றாம் வருஷ பூர்த்திக்கொண்டாட்டம்:—

நிகழும் பரீதாபி ௵ சித்திரை ௴ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசாதினத்தில் நடைபெறவேண்டிய இக்கொண்டாட்டம் இச்சபையின் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்கள் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்கள் காலஞ் சென்றமையால் அப்போது நடைபெறாமல் ஆடி ௴ ௨௨ ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசாதினத்தில் மேலைச்சிவப்பட்டி சன்மார்க்க சபைக் கட்டிடத்தில் நிறைவேறியது. வலயபட்டி, ஆ. தெக்கூர், கண்டனூர், கொற்றமங்கலம், காரைக்குடி முதலிய பல நகரங்களிலிருந்து வணிகமணிகளில் அநேகர் வந்து கூடினார்கள். வரமுடியாத வித்துவான்களும பிரபுக்களும் பலர் தந்திமூலமாகவும் கடிதவாயிலாகவும் அறிவித்தார்கள். சபாமண்டபத்தின் முன்புறம் கொட்டகைபோட்டு வாழை கமுகு நாட்டி அலங்கரிக்கப்பெற்றிருந்தது. வழக்கப்படி சுந்தரமூர்த்திநாயனார் புராணம் வாசிக்கப்பெற்றது. காலையில் குருபூசை மகேசுவரபூசைகள் நன்குநடந்தன. மாலை 3மணிக்கு சபைகூடியது. வித்துவான்களும் நகரத்தார்களும அன்புடன் கூடினார்கள். தேவார பாராயணம் நடந்தபின் சபையார் விருப்பப்படி புதுக்கோட்டை ஸ்டேட் ரெவினியு செட்டில்மெண்ட் ஆபீஸர் ப்ரும்மஸ்ரீ காமேசுவரய்யரவர்கள், எம். ஏ. அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து முன்னுரையாகச் சில கூறினார்கள். மகிபாலன்பட்டி வித்துவானும், இச்சபையின் உற்பவகாரணரும், வடமொழி தென்மொழி வல்லுநரும், செய்யுளியற்றல் பிரசங்கித்தல் வசனமெழுதல் ஆதியவற்றில் மிகத்தேர்ந்தவரும் ஆகிய ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனாதிபதியவர்கட்கு வந்தனோபசாரப்பத்திரம் வாசித்தார்கள். அது ஐயரவர்களது ஆரிய ஆங்கில கல்வித்தேர்ச்சி, தமிழபிமானம், ஈசுவரபக்தி, நீதி, ஒழுக்கம், கருணை முதலியவற்றைப் பாராட்டி இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றிருந்தமையால் சபையார் யாவரும் இன்பமெய்தினர். ஏனையரும் மகிழ்தற்பொருட்டதனை இவண் தருகின்றாம்.

---

கணபதிதுணை.

# வந்தனோபசார பத்திரம்.

அக்கிராசனாதிபதி

## பிரமஸ்ரீ P. காமேசுவர ஐயரவர்கள், M. A.

ரெவினியூ ஸெட்டில்மெண்ட் ஆபீஸர்,
புதுக்கோட்டை ஸ்டேட்.

அன்பும் அறிவும் இன்புறக்குழீஇ
யோருருவெடுத்தாங் கீரிரு மறைதேர்
அந்தணர் குலத்து வந்த எம் ஐயா!

சன்மார்க்க சபையென்னும் இவ்விளங் குழவியின் மூன்றாம் ஆண்டு நிறைவேற்றக்கொண்டாட்ட நிமித்தம்கூடிய இம்மகாசங்கத்தில் நடைபெறும் மதிநுட்ப நூலோடுடைய பண்டிதமணிகளின் அருமைப்பிரசங்கங்களை பெழில்பெற நடாத்தற்கும், பன்னாட் கற்றுணர்ந்த வேதோபநிடத முதலிய சாத்திர வாராய்ச்சிகளையும்அந் நெறியே அநுபவ வகையில் மேற்கொண்டுள்ள தங்கள் அரிய குணஞ் செயல்களையும் எம்மனோரெளிதினுணர்ந்து மகிழ்ந்து இன்புறுதற்கு ஏதுவாக இவ்வமயம் எங்கள் வேண்டுகோட்கிணங்கிச் சபைத்தலைமையை யேற்ற பெருநன்றியை யாங்கள் எழுமையு மறவோம்.

வள்ளால்!

இந்நிலவுலகத்து மக்களாய்ப் பிறந்தார் உறுதிப்பயன்களை ஒருதலையானெய்துதற்குச் சாதனமாகவுள்ள பாஷாஞானத்தையும், சாத்தியமாகவுள்ள சமயஞானத்தையும் ஒருங்கே பெற்று அம்முறையேயொழுகிப் பெருநலந்துய்க்கும் பெற்றியராகிய இக்காலத்து வடமொழியென்னு மாபயோததியையும், ஆங்கில மொழியெனும் பாங்குறுபரவையையும், செந்தமிழ் மொழியெனுந் தெள்ளிய அமிழ்தத்தையும் தேக்கறவுண்டு, புதுவைத்தமிழரையர் பெருமான் தகவினளித்த அரசியற்றொழி லிடைவிடாது செய்தற்குரியதாகவிருந்தும், உலகமாதாவாகிய சிவசக்தியாரின் பூஜனையைச் சிறிதுந்தாழ்க்காமு முப்பொழுதுஞ்செய்து அவ்வன்னையாரின் றிருவருள் விலாசத்தியைந்து நித்தியவுணர்வுபெற்றுப் பேரின்பந் துய்த்தற்குரிய

பெருநலனைப்பெற்று வாழும் பீடுடைய பெருமான் தாங்களே யன்றோ!

அண்ணல்!

பரோபகாரநிமித்தம் பிரகாசிக்கும் ஜீவதயை யென்னும் நல் இரத்தினத்தை இருதயமென்னும் பொற்செப்பினுள் பேணிவைத்து மகிழும் பெரியாருட் டலை சிறந்த தாங்கள் அம்மணி யொளியை இச்சன்மார்க்க சபைக்கட் பரவச்செய்து சபை யென்னும் பெயரை அந்வர்த்தநாமமாக்கிய தங்களுதவிக்கு யாங்கள் செய்யக்கடவதாகிய கைம்மாறு யாதுளது?

சிவபக்தியிற் சிறந்த அறுபான் மும்மை நாயன்மார்களின் அருட்சரித்திரங்களை யிவ்வுலகுக்கு பிரதமத்திலீந்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூஜையும், சன்மார்க்க சபையின் மூன்றாம் வருட உத்ஸவமும் ஒருங்கு நிகழும் இற்றைஞான்று தலைமை வீற்றிருந்து பேருதவிபுரிய முன்வந்த தங்களுக்கு நீண்டவாழுளையும் பரோபகார சிந்தையையும் பிறநலன்களையும் மேன்மேலும் அபிவிருத்தியாம்படி கருணைபாலித்தருளும் வண்ணம் எல்லாரறிவினுள்ளும் அந்தராத்மாவாக இருந்து விளங்கும் பரம கருணாநிலயமாகிய உமாபதியார் பொன்னடிக் கமலங்களைப் பன்முறை யெண்ணி வழுத்துகின்றோம்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள,
சன்மார்க்க சபையார்.

22—7—12
மேலைச்சிவப்பட்டி

பின் மதுரை வித்தியாபாநு பத்திராதிபர் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் சபையின் மூன்றாம ஆண்டு நிகழ்ச்சிகளைப்பற்றிய அறிக்கைப்பத்திரம் வாசித்தனர். மதுரை வித்துவான் ஸ்ரீ சுந்தரேசுவரய்யரவர்கள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரச் சுருக்கத்தைப் பக்திச்சுவைததும்ப இனிது உபந்யசித்தார்கள். மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம் அக்கிராசநாதிபதி ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பக்தி என்னும் விஷயத்தை சுவாமி விவேகாநந்தர் கருத்தைப் பின்பற்றி நன்றாகப் பிரசங்கித்தார்கள். தூத்துக்குடி சைவப்பிரசாரகர் ஸ்ரீ பொ. மு. முத்தைய பிள்ளையவர்கள் கடவுளு

ண்மை என்னும் விஷயத்தைப்பற்றி உலகத்தோற்றமும், இதற்கொருகருத்தா வேண்டுமென்பதும், அக்கருத்தாவினிலக்கணங்களும், ஆன்ம விலக்கணங்களும், ஆன்மா கடவுளையறிந்துகூடும் மார்க்கமும், இவை முதலிய பலவும் யாவரும் நன்குணருமாறு பிரசங்கித்தார்கள். ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் ஞானம் என்னும் விஷயத்தைப்பற்றி ஞானமென்பதன் பதப் பொருளும், அதன் வகைகளும், இன்றியமையாமையும், பயனும், இதனைப்பெறும் உபாயமும், பெற்றுயர்ந்தார்களின் மேன்மையும், நாமிதனைப்பெறச் செயற்பாலவை யின்னவெனபதும் விளங்கப் பற்பல தமிழ்வேதச் செய்யுட்களானும சித்தாந்த சாத்திரச் செய்யுட்களானும் மிக இனிமையாகவும் தெளிவாகவும் கேட்டோர்ப்பிணிக்கும் தகையவாய்ப் பிரசங்கித்தார்கள். சொ. புதூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர் ஸ்ரீ. ரெ. ராமமூர்த்தியையரவர்கள் அடியில்வரும் வெண்பாவைக் கூறினார்கள்.

பதிசேருயர்ஞானம் பான்மையுட னேநம்
துதிசேர் கதிரேசத் தோன்றல்—மதிசேருங்
கற்றாரு மற்றாருங் காதலுறச் சொற்றானல்
மற்றா ரிவணிசர்ப்ப வர்.

இதனைக்கூறிய இராமமூர்த்தியையரவர்கள் ஈகையைப்பற்றி ஈதலின் தன்மை, பெருமை, பயன், ஈவோர் தன்மை, புகழ்முறை, இரப்போர் தன்மை, முதலியவற்றை விரித்து மதுரமாகப் பிரசங்கித்தார்கள். முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் சபையின் நன்மை, தமிழின் பெருமை, சைவசித்தாந்தச் சிறப்பு, சிவபரத்துவம் ஞானச் செல்வப்பயன், ஈதற்பண்பு இவையனைத்தையும் பற்றி வேதோபநிஷத்துக்களின் கருத்தை விளக்கியும், உபந்யசித்தவர்களின் யுக்தி சாதுர்யங்களை வியந்தும் வெகு தெளிவாகப். பேசிச் சபையை உவப்பித்தார்கள். இவர்கள் ஆங்கில பாஷையில் உயர்தரப்பட்டம் பெற்று உயர்ந்த உத்தியோகத்தி லுற்றும் சாஸ்திர ஆராய்ச்சியிற் றேர்ந்து ஒழுக்கத்தின்றலைநின்றுவரும் பெருஞ்சிறப்பும் சைவத்திலும் தமிழிலும் இவர்கட்குள்ளதாய அன்பும் பேச்சின் இனிமையும் யாவர் மனத்தையும் கவர்ந்துகொண்டன அப்போது மதுரை, ஸ்ரீமு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள்,

மாதவன்முன் பாற்கடலில் வருமமுதைப் புலவருக்கு வழங்கி வாழ்வு
மீதுறச்செய் தனன் புதுவைக் காமேசு வரனும மேலா னிந்நாள்
ஏதுவகை யினுந்திரியாப் பிரசங்க வாரிக்ளி லிசைவ தான
போதவமு திவண்பலர்க்கு மினிதளித்தா னுயர்வெவாக்கோ புகனு வீரே.

என்னும் கவியைக்கூறிப் பொருளை விரித்துரைத்தார்கள்.

## மதுரை ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்

பின் வரும் வாழ்த்துக் கவிகளைக கூறினார்கள்.

—:o:—

கடலுடுத்த புடவியினிற் புகழ்மிகுத்த நகரத்தார் களுமற் றோரும்
உடலெடுத்த உண்மையிதென் றோர்ந்துய்ன் உறுவதற்கோ ஊரு உள்ள
திடமிகுத்த மடமையெனும் கொடியஇருள் கடியுமணித் தீபம என்ன
வடமொழிக்குப் பாணினியா வண்டமிழ்க்குக் குடமுனியா வந்த எங்கள்,

உயிராரும் உழுவலன்பின் ஓங்குபுகழ்க் கதிரேசன் உகந்த வாறே
செயலாலும் வாக்காலும் மனத்தாலும் பிறர்க்கிதமே செய்வோ னென
மயிலாருஞ் செட்டியைநேர் பழநியப்பன் முதலாய வணிக மேலோர்
இயலார வரு"மேலைச் சிவபுரிச்சன் மார்க்கசபை" எனறும் வாழி.

வழுத்திடுநல் லுயர்வணிக மாண்குலத்தில் அவதரித்தோன் மதிப்போ ரேகம்
ஒழுக்கமறி விரக்கமன்பு கல்விபொறை தம்முன்போல் ஒருங்கே பூண்டோன்
விழுத்தகுசீர் இம்"மேலைச் சிவபுரிச்சன் மார்க்கசபை" மேலும் மேலும்
செழித்திலகத் தலைமைவகித் துறை அண்ணாமலைநாமன் சிறப்ப வாழி.

ஈசுரனார் திருவருளால் இம்மேலைச் சிவபுரியில் இன்று கூடும்
மாசபையின் அக்ராஸ நாதிபதி ஆகிஎமை மகிழச் செய்த
பூசுரர்சி காமணிகா மேசுரப்பேர் பூண்டிலகும் புனிதன் றானும்
நேசமொடு குழீஇ யிருந்த சபையினரும் பரனருளால் நீடு வாழி.

ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் சபாநாயகரவர்கட்கும், வித்துவான்கட்கும், சபையோர்கட்கும் வந்தனங்கூறி புஷ்பம் சந்தனம் தாம்பூலம் வழங்கினார்கள். தேவார பாராயணத்துடன் நிறைவேறியது.

மறுநாள் ஆடிமீ அஉ காலை 9-மணிக்கு சபை கூடியது. தேவாரபாராயணமானதும் சபையார் விருப்பப்படி மதுரை வித்து

வான் ஸ்ரீ சுந்தரேச ஐயரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்தார்கள். தஞ்சைத் தமிழ் முனிஷி ஸ்ரீ கோவிந்தசாமிபிள்ளை யவர்கள் மனித ரியல்பு என்பதைப்பற்றியும், ஆத்தங்குடி விவேகவிளக்க வித்தியா சாலைத் தமிழ்ப்போதகர் ஸ்ரீ சுப்பராமய்யரவர்கள் ஜீவகாருண்யம என்பதைப்பற்றியும் நன்றாக உபந்யசித்தார்கள். ஸ்ரீ பொ. மு. முத் தயபிள்ளை யவர்கள் 'மோனமென்பது ஞானவரம்பு' என்னும் ஔவைப் பிராட்டியார் திருவாக்கைப்பற்றி விஸ்தாரமாகவும் தெளி வாகவும் பிரசங்கித்தார்கள். சபாநாயகரவர்கள் மேற்கண்ட உபந் யாசங்களையும் உபந்யாசகர்களையும் பற்றிச் சிறப்பித்துக்கூறி முடித் தார்கள்.

மாலை 4-மணிக்கு மறுபடியும் சபை கூடியது. ஸ்ரீ சுந்தரேச ஐயரவர்களே அக்கிராசனம் வகித்தார்கள். புதுக்கோட்டை ஆரிய ஆங்கில ஆந்திர திராவிட வித்துவான் ஸ்ரீ. ஸ்ரீநிவாசய்யங்கார் பீ. ஏ. அவ ர்கள் 'புகழ்' என்னும் விஷயத்தைப்பற்றி, புகழ் இன்னதென்பதும், இதை யாவரும் விரும்பவேண்டுமென்பதும், இவ்விருப்பால் விளை யும் நன்மைகளிவை யென்பதும், இதனைப் பெற்றுயர்ந்தாரிவரிவ ரென்பதும் பிறவும் எடுத்துவிளக்கியுபந்யசித்தார்கள். ஸ்ரீ மு. ரா. கந்த சாமிக் கவிராயரவர்கள் வேளாண்மைச் சிறப்பு என்பதைப்பற்றி யுபந்யசிக்கத்தொடங்கி தொழில்கள் பலவகைப்படும். அவற்றுள் கிருஷித்தொழிலே சிறந்தது. அதனைச் செய்தற்கு ஏர் வித்து நிலம் ஏவலாளர் முதலிய உதவிகள் வேண்டும். காலம் பார்த்துத் தாழ்க்காது செய்யவேண்டும். இதனால் வரும் பயன் தானியாதிப் பொருள் களே. இவை உடல் வளர்ச்சிக்குரியன. அழியத்தக்க உடலைக் காக் கும் அற்பப் பயனுடைய இந்த வேளாண்மையைப்பற்றி யான் இங்குச் சொல்ல வரவில்லை. மற்றுச் சிறந்த வேளாண்மை யாதெ னில் "இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக, வன்சொற் களை கட்டு வாய்மை எருவட்டி, அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீனவோர், பைங்கூழ் சிறுகாலைச் செய்" என்னும் இக்கவியிற் கூறிய வேளாண்

மையே மிக்க சிறப்புற்றதாகும் என்று இதன் பொருளை விரித்துக் கூறிச் சபையை மிக மகிழ்வித்தனர். அப்போது,

மதுரை ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்
அடியில்வரும் செய்யுளைக்கூறி வாழ்த்தினார்கள்.

---

எங்கள்மனப் புலந்திருத்திச் செவிக்காலிற்போதனைநீர் இசைத்துவாய்மைத்
துங்கமுளை வளர்வித்து மறதியெனும் களைகளைந்து தூய ஞானப் [கொண்ட
புங்கமுறுங் கதிரீனப் புரிந்த "சொல்லேர் உழவன்" எனும் புகழ்மீக்
இங்கிதவா சகக்கந்த சாமியெனும கவிராஜன் இலகிவாழி.

பின் கண்டனூர் ஸ்ரீ. தெ. அரு. சித. இராமநாதச் செட்டியாரவர்கள் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் விஷயத்தைப் பற்றி பெரியார் தன்மையையும், அவரைத் துணைக்கொள்ள வேண்டிய அவசியத்தையும், துணைக்கொள்ளும் முறையையும், கொண்டால் எய்தும் பயனையும், கொண்டுயர்ந்தார் சரித்திரங்களையும் நன்றாகப் பிரசங்கித்தார்கள். பின் நெடுவை வித்துவான் ஸ்ரீ. திரு. இராமசுவாமியய்யங்காரவர்கள் அடக்கம் என்னும் விஷயத்தைப் பற்றி அடங்குதலின் முறை, அதனாலுறும் பயன், அடங்காமையினாலுறுந்துன்பம் முதலியவற்றை விரித்துக் கூறியதுடன் அருட்பாக்களை யின்னிசையொடு பாடிச் சபையைப் பரவசப்படுத்தினார்கள். இச்சபையின் நிரந்தர அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் வ. பழ. சா. அண்ணாமலைச் செட்டியாரவர்களிப்போது தலைமை வகித்துச் சபையை நடத்தும் நன்மையைப்பற்றி வித்துவான்கள் நன்றிகூறி வாழ்த்துக்கவிக ளிசைத்தார்கள். வருமாறு:—

மு. ரா. கந்தசாமிக் கவிராய ரவர்கள்கூறியது.

---

பால்விருப்பன் பிணியினுக்கு மருந்தவன்பான் மருந்துதரப் பருகி யின்பம்
மேலுறக்கொண் டாங்குதமமுன் விண்புகுநகாற் புகன்மொழியே வேத மாக
நூலறிஞர்சன்மார்க்க சபைத்தலைமை வகித்தமதி நுணுக்கம் வாய்ந்த
சீலன் அண்ணாமலை நாயகன் சபைமகிழப் பரதனிலும் சிறந்து வாழ்க.

திரு. இராமசுவாமியய்யங்காரவர்க ளியற்றியது.

அன்பரும்பி யின்னகைபூத் தார்ந்தபுகழ்க் காயுதவி
யின்ப நறும்பலன்பெற் றேயுமால்—வன்புமிகு
புன்மார்க்கம் போக்கிப் புகுமார்க்கந் தேற்றுமிந்தச்
சன்மார்க்க மென்னுஞ் சபை.

போ மு. முத்தயபிள்ளையவர்க ளியற்றியது.

சன்மார்க்க சபைநிறுவிச் சைவசம யம்வளர்க்கத் தக்க மேலான்
பன்மார்க்க ரும்புகழும் பழநியப்ப சீமான்றன் பாண்மை யோங்கச்
சன்மார்க்க சபையென்றுந் தாழாது நலனுறநற் றலைமை யேற்ற
தன்மார்த்த வேந்தாம் அண்ணாமலைநற் சைவனனி தழைத்து வாழி.

இம்மூவரும் கவிப்பொருள்களை யினிது விளக்கி முடித்தார்கள்.

சபாநாயக ஐயரவர்கள் உபந்யாசங்களை யெடுத்து விளக்குமுகத்தால் தமது ஆற்றலைக்காட்டி நயம்படப்பேசிப் பெருமகிழ்ச்சி தந்தார்கள். ஸ்ரீ. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் சபாநாயகர் முதலிய வித்துவான்கள் யாவருக்கும் வந்தனங்கூறிப் பூமாலைபுனைந்து சபையோருக்கும் வாழ்த்துக்கூறிச்சந்தன தாம்பூலம் வழங்கினார்கள். தேவார பாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

சுபம் !!

சன்மார்க்கன்.

(மறைகின்றான்)

## இரண்டாம் அங்கம்

### இரண்டாம் காட்சி.

இடம் ராக்ஷஸன் அரண்மனை.

ப்ரவேசம்:— ராக்ஷஸன் ஆஸனத்தில் உட்கார்ந்து கொண்டும், கவலையுற்றவனாகவும் இருக்கின்றான். பக்கத்தில் ஸேவகன் நிற்கின்றான்.

ராக்ஷஸன்:—(கண்ணும் கண்ணீருமாய்) கஷ்டம்! ஆஹா! கஷ்டம்! கஷ்டம்!

(4) யதுவம்சத்தவர்கள் போல் நீதி பராக்ரமம் குணம் முதலானவைகளால் தங்கள் பகைவரனைவரையும் வென்ற நந்தர்களின பெரிய ராஜவம்சமானது இரக்கமற்ற விதியின் கொடுமையால் அழிந்த பிறகும் சிந்தை கொண்டு கலங்கித் தவிக்கும் மனதுடன் இரவும் பகலும் துயில் கொள்ளாது யான் செய்யும் முயற்சிகள் சுவரின்றிச் சித்திரம் எழுத முயல்வதைப் போன்றதாகும் ஆயினும்

(5) எனது ராஜபக்தியை மறந்தாவது உலகவிஷயங்களில் அதிகப்பற்றினாலாவது உயிரை இழக்க நேரிடுமென்ற பயத்தாலாவது யான் உயிர்ப் பதவியடைய வேண்டுமென்ற எண்ணத்தாலாவது பிறர் வேலையில்புகுந்து எனது புத்தித் திறமையை ராஜவிவகாரங்களில் செலுத்த ஒப்பவில்லை. பகைவரை யழிப்பதால் பரலோகஞ் சென்றிருக்கும் எனது எஜமானனுக்கு ஓர் ஆறுதல் செய்யலாமென்ற எண்ணத்தினால் தான் (இவ்வாறு செய்கின்றேன)

(ஆகாசத்தை நோக்கி கண்ணும் கண்ணீருமாய்)

தாமரை மலரில் வஸிக்கும் தேவி நீ குணகுணங்களை பகுத்தறியக் கொஞ்சமேனும் வல்லமை யற்றவளா யிருக்கின்றாய்!! ஏனென்றால்

(6) ஆனந்தத்தை விளைவிக்கத்தக்க நந்த மஹாராஜனைக் கைவிட்டு அவன் பகைவனை மௌர்ய புத்ரனை ஏன் பற்றிக்கொண்டாய்?                    (இன்னும் வரும்).

R. வேங்குநாராயணசர்மா B. A., B. L.

# காலஞ்சென்ற ஸ்ரீமாந். எஸ். வெங்கோபா சாரியாரவர்கள் மீது இரங்கற்பாக்கள்.

மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும் மாணவர் செந்தமிழ்ச் சங்கம்
அக்கிராசனாதிபதியுமாகிய
ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ணையரவர்க ளியற்றியன.

திருமதுரைக் கல்லூரிப் பிரதமபோ தகராகிச் செவ்விதாக [கள்
இருபதுடன் இரண்டாண்டு கண்ணிமைபோல் அதைக்காத்தாய் எம்மனோ
அருமைமிகார் கல்வியறி வாதிகுணத தாற்சிறக்கும் அணிசெய்வித்தாய்
பெருமைமிகு வெங்கோபா சாரிய! நீ பிரிந்ததுயர் பேசற்பாற்றே! (க)

மதுரைக்காலேஜ் எனும்பேர் கேட்டவுடன் கவர்னர்களும் மதிக்கு மாறு
புதுமைத்தாம் புகழ்நின்னாற் கிடைத்ததெனில் நின்திறமை புகலற் பாற்றே?
இதனைத்தான் நின்குழந்தை எனக்கருதி வளர்த்தனையே எங்குற் றாயோ
பதுமத்தான் குலமணியே! வெங்கோபா சாரியப்பேர்ப் பண்புற் றானே. ()

சென்னைபுரி சர்வகலா சாலையர்ச காவாகும் சிறப்புப் பெற்றாய்
அன்னதிலேய் பரீக்ஷாதி காரிகளில் ஒருவனென அமையப் பெற்றாய்
இன்னுமுள பெருஞ்சபைகள் எவற்றிலுநீ சேர்ந்துநலம் இலங்கப்பெற்றாய்
உன்னையெவர் நிகராவார்? வெங்கோபா சாரியப்பேர் உறுமே லோனே! ()

இம்மதுரைக் கல்லூரி எனுமகவுக் கிருபொருளில் ஏற்ற மான [தாய்
செம்மையுள கல்வியெலாம் நன்குதவிச் செம்பொனெலாம் சேர்ந்தார்க் கீந்
அம்மகினை தறிவாற்றல் என்சொல்வேன்! தாய்தந்தை ஆசான் ஆகி
எம்மையெலாம் கணித்துவந்த வெங்கோபா சாரியநீ எங்குற் றாயோ! (ச)

நோயகல மருந்தூட்டுந் தாய்போல மடமகல நுவலுங் கல்வி
ஆயஅமு தூட்டுங்காற் கொள்ளாரைச் சினந்துநலம் அமையச் செய்தாய்
தீயடையுங் கோபம்விரும் பப்படுவ தெனும்பொருளை நேர்வ தான
தூயபெயர் வெங்கோபா சாரியெனப் பெற்றனைநின் சூழ்ச்சி என்னே. (ரு)

தலைப்பாகை தரித்தவர்கள் காலேஜு தனைநடத்தத் தகாதா ரென்ன
நிலைப்பாகக் கருதுவர்மெய் யறியாதார் எனக்காட்டி நேர்மைக் கெல்லாம்
இலக்காகும் நினைத் "தாதா" "கிழவன்" எனல் நீமுதிஞன் என்னற் கன்று
சொலற்பால "கலைக்கொடையாய" "உரிமையுளாய்" எனக்குறிக்கும்
[சொல்லாம் மன்னே. (சு)

சுற்றமுத லானவரைத் துறக்கினுங் கல்லூரியினைத் துறக்க லாற்றா
முற்றறிவாய்! நின்போனறே அதைக்காக்கத் தக்கமதி முதிஞன் நன்கு
கற்றவன்பல் வகைமாண்பும் பெற்றவன் ராஜாராம கனவா னென்பான்
உற்றதனால் துறந்தனையோ? வெங்கோபா சாரியனும் உண்மை மாலே! (எ)

எனக்கியைந்த நலம்பலவும் உனில்அதிகம் சமையம்அறிந் தியற்றும் சீரோன்
நினக்கியைந்த நற்றுணைவன் ராஜாரா மையனெனும் நிபுணன் இங்குன்
றனக்கியைந்த கல்லூரித் தலைமைபெற்றுப் பாலிக்குந் தன்மை யாலே
மனக்கியைந்த தாறுதல், எம் வெங்கோபா சாரியப்பேர் மதிவல் லோனே.

மதுரைகாலேஜ் தமிழ்ப்பண்டிதர் **B. B.** சுப்பராமையர்

அவர்களியற்றின

---

1. வெங்கோபா சாரியென மேவியசீர் வேதியனே
பொங்கரவம் பூண்ட புராரிமுனஞ்—சங்கையிலா
ஆடல்செய் மாமதுரை யர்ங்கிலக லாசாலை
நீடுதலை யாசானா நேர்ந்து.

2. ஒன்றொழியெண் ணலாண் டுனைப்போல வித்தைதனைக்
கன்றுமுக மின்றியெவர் கற்பிப்பார்—துன்றுபல
வாயசீர் மாணவரை யன்புடனே காத்தவுனைத்
தாயெனவே சாற்றிடலாந் தான்.

3. மூன்றரையி லட்சம் முதல்வேண்டு மென்றுசென்னை
சான்றகலைச் சங்கத்தார் சாற்றலுமே—யென்றளவு
மூலதனஞ் சேர்க்க முயன்றிடவே முன்னியநற்
சீலனை யெங்கொளித்தாய் செப்பு.

4. இத்தரையி லுள்ளோர்க ளீயார் பொருளென்றே
உத்தரதிக் கோணிடத்தி லுற்றனையோ—மெத்த
வருத்தமுறு மாணவர்கள் வாத்திமார் மற்றோர்
வருத்தமறச் செய்யாயோ வந்து.

5. உன்னைப்போல் மேற்பார்க்க வுற்றா னிவணடைந்து
பின்னைநீ சென்றாற் பிழையாமோ—நின்னறிவால்
மிக்கா யெனவெண்ணி மேலுலகோர் தாமழைக்கப்
புக்கனையோ போதா புகல்.

6. புண்ணியவா னாதலினாற் பொன்னுலகத் தோர்கங்கைத்
தண்ணீரி னாலாட்டித் தண்ணமுதந்—தண்ணளியா
லூட்டியுய ராசனத்தி லுன்னை யிருக்க வைத்துக்
காட்டிடநீ கண்டனையோ கா.

7. எட்பெய்யூ வாகி யிருந்த திறல்கேட்டுச்
செப்பரிய விண்ணவர்கள் சேர்ந்துன்னை—யப்பனே
வாரா யெனவழைக்க வானவர்தங் கோன்சபைக்குச்
சீராகச் சென்றனையோ செப்பு.

8. வெங்கூற்ற நின்னை விரும்பிவரா னேனென்னின்
வெங்கோபா சாரியென மிக்கஞ்சும்—பொங்கோதைப்
பாற்கடலிற் பாம்பணைமேற் பள்ளிகொண்டோன் பத்தனீ
ஏற்கவுட னேகினைசொல் லெற்கு.

னம்

9\. மன்னனைந்தாம் ஜார்ஜின் மகுடா பிஷேகதினம்
நன்னயமா வேநீ நடத்தியதால்—சொன்ன
மெடலுனக்கு மேன்மைபெற மேவியதை யேற்க
நடந்துடனே வாராயோ நாட்டு.

10\. வீடோ ரரண்மனையா வேலை முடிந்தவுடன்
ஓட முயல்வீ ருரைக்கின்றேன்—கூடியிங்கு
இன்பமாய்ப் பேசி யிருந்தகல்வோ மென்றனையே
பின்பெரிவ் வாறுரைப்பார் பேசு.

---

## ஆராய்ச்சி.

வித்தியாபாநு தொகுதி 4 பகுதி 3. பக்கம் 75-ல்
திருக்குறள்மாட்சியில் கீழ்

"வாசனையென்பது பொருள்களைக் கண்டபொழுது அவற்றைப்பற்றிச் செல்வதாகிய ஆசை யுள்ளத்தில் வசித்திருப்பது. வசித்திடுங்கால் அவா வென்றும், பொருள்களைப்பற்றிச் செல்லுங்கால் ஆசையென்றும் பெயர் பெறும்" என்பது கண்டது. இதில் அவாவுக்கும் ஆசைக்கும் கூறப்பட்ட பொருள் பொருந்தா. என்னை? நச்சினார்க்கினியர் வேட்கைக்குப் பொருள் பொருள்கள்மேற்றோன்றும் பற்றுள்ளமெனவும், அவாவுக்குப் பொருள் பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேனிகழும் ஆசையெனவும் கொண்டா ராகலான்.

அ. முத்தையமுதலியார்
உபாத்தியாயர், பரங்கிப்பேட்டை.

---

## பாரத சந்தேக வினாவிற்கு விடை.

வில்லிபாரதம் ஆரணியபருவம் அருச்சுனன் றவநிலைச் சருக்கம். 16. 17.

"கேட்டிநீ முரச கேது கிளைஞர்தம் மிருக்கை தோறு
மீட்டிய புதல்வருள்ளோர் யாரையு மிருத்தல் செய்து
காட்டிடை நீரும் வைகிக் கடவநாள் கழித்து மீண்டு
நாட்டிடை வந்தாற் காண்டி நலனுளோர் நலன்க ளெல்லாம்".

"அன்னவையச் சுபலன் பாவை யருகுற விருத்தி யுங்க
டன்னையர் தம்மை யாக சேனனூர் தன்னில் வைத்துப்
பின்னையும் வேண்டு வோரைப் பிறிவுற நெறியிற் போக்கி
நன்னயத் தொடுநீர் கானம் வைகுத னன்மை யென்றான்"

என்னும் இவ்விரண்டு செய்யுளானும் திரௌபதைக்குப் புத்திரர்கள் முன்பே பிறந்துள்ளார் என்று வெளிப்படுதலானும், இதுமுதல் திரௌபதைக்கு ஏனையோர் சம்பந்தமுண்டென்பது இற்பகுதியி லின்மையானும் ஸ்ரீ வியாசபகவான் திருவாக்கின்படியே நடந்தனரென்பதற்கு ஐயமின்று.

பரங்கிப்பேட்டை. சு. வை. குமாரஸ்வாமி.

# சமாசாரக்கொத்து.

**கோனாபட்டு ஞானசம்பந்த நற்சபை**—கோனாபட்டு வாசிகளான நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் நன்முயற்சியால் நிகழும் பரீதாபி ௵ ஆடிமீ 4தேதி சுக்கிரவாரம் காலை 8-மணிக்கு கற்பகவிநாயக கலாசாலையில் ஸ்ரீ ஞானசம்பந்த நற்சபை முதன் முறை தொடங்கப்பெற்றது. ஷை கலாசாலைப்போதகாசிரியர் ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தை இனிது உபந்யாசித்தார்கள். மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் முதலிய பண்டிதர்கள் சபையின் ஆக்கங் கருதிப் பேசினார்கள். பின் மாலை 3 மணிக்கு ஸ்ரீ மாந் சு. முரு. ஷண்முகஞ்செட்டியாரவர்களின் விசித்திரவிஸ்தாரகிருகத்தில் மறுபடியும் சபை கூடியது. சபாமண்டபம் கண்கவர் வனப்பிற்றாக நிர்மாணிக்கப் பெற்றிருந்தது. பல இடங்களிலிருந்து நகரத்தார்கள் சுமார் புருஷர்கள் 500 பேர்களும் பெண்கள் 200 பேர்களும் வந்திருந்தார்கள். புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் சைன்ஸ் ப்ரவுஸர் ஸ்ரீ சுந்தரேசுவரய்யரவர்கள், பீ. ஏ. அக்கிராஸனம் வகித்தார்கள். அருட்பாக்கள் இன்னிசையுடன் பாடப்பட்டன. சபாநாயகர் முன்னுரையாகச் சில கூறியபின் புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் தமிழ்ப்பெருமையைப்பற்றி யுபந்யசித்தனர். தமிழ் சிவபிரானிடத்தே ஆதியிற் றோன்றியதென்பதும். அகத்திய முனிவர் முதலிய பெரியாரும் அரசர்களும் வளர்த்த சிறப்பும், வள்ளல்கள் முதலானோர் பரிபாலித்த மாண்பும், தெய்வத்தன்மையும், வடமொழியின் உதவியை ஒரு சிறிதும் வேண்டாது தனித்துநின்று விளங்கித் தன்னிடத்து வேறுபல பாஷைகள் தோன்றுமாறு இடந்தந்து நிற்பதென்பதும், இன்னும் பல விஷயங்களும், நன்கு பேசினார்கள். பின்னர் மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் கல்விச்சிறப்பை உபந்யசிக்கத்தொடங்கி மனிதப் பிறப்பி னருமை, கல்வியறிவின்மாட்சி, ஆங்கில போதனை முறை, தமிழ்ப்போதனையில் ஆதிமுதற்கொண்டே சன்மார்க்கத்தைக் காட்டும் நம் முன்னோர் மதிநுட்பம், கற்கவேண்டிய நூல்கள், கல்வியின்பயன், புகழ்பெற விரும்பவேண்டுமென்பது, கல்லாமையின் இழுக்கு, மற்றும்பல அரிய விஷயங்களை யெடுத்து யாவர்க்கும் விளக்கம் ஆகும்படி வெகுதெளிவாகவும் இனிமையாகவும் பற்பல மேற்கோள்களுடன் உபந்யசித்தனர். பின் சொ புதூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ ரே. இராமமூர்த்தியய்யரவர்கள் ஞானத்தைப்பற்றிப் பேசத்தொடங்கி அது இதசன்மையது, இத்தனை வகையது, அதனாற் பெறும் பயனிது, எனப் பலபட வகுத்து இனிய குரலுடன் தக்க மேற்கோள் காட்டி நன்கு பேசினார்கள்.

பின் கண்டனூர் ஸ்ரீ தே. அரு சித. இராமநாதச்செட்டியாரவர்கள் சினமின்மையைப்பற்றிப் பேசத்தொடங்கி சினம் வரும் வழியும் வந்தபின் செய்யுங் கேடும் வாராமற்செய்யும் விதமும் அதனால் வரும் நலமும் மற்றும் பல விஷயங்களும் விரித்துச் சரித்திரங்களும் நூற்பிரமாணங்களும் காட்டி நன்றாகப் பேசினார்கள்.

மதுரை வித்தியாபாநுப்பத்திராதிபர் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள், ஆத்தங்குடி விவேகவிளக்கவித்தியாசாலைப்போதகர் ஸ்ரீ சுப்பராமய்யர் அவர்கள் இருவரும் இச்சபையின் ஆக்கத்தைப்பற்றிப் பல நல்வசனங்களைக் கூறினார்கள். முடிவில் சபா நாயகரவர்கள் மேற்குறித்த பிரசங்கங்களை வியந்துபேசியதுடன் இத்தகைய சபைகளால் வரும் எதிர்கால பலனைப் பாராட்டி வற்புறுத்தி சபையோர்க்கு மிகவும் ஊக்கமுண்டாகும்படி பேசினார்கள். சிலர் வாழ்த்துப்பாக்கள் கூறினார்கள் அவை வருமாறு.

### ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்காரவர்க ளியற்றியது:

புகழ்மாட மாளிகைசூழ் பொன்னகராங் கோநகரம் பொருந்து வைச்ய
மகவான்கள் தமிழ்மாது மனங்களித்து நடனமிட வாய்த்த மைத்த
திகழ்ஞான சம்பந்த நற்சபைவிண் சுதர்மையி னும்சிறந்து வாழி
இகபரத்தின் சாதனங்க ளிசையுடன் பெற்றியாவருமே யினிதின்வாழி

### ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் கூறியது.

உன்ஞான மார்க்க முறுநர்வாழ் கோநகரில்
நன்ஞான சம்பந்த நற்சபையும்—பன்ஞான
போத முறுந்தமிழும் போற்றும் வணிகர்களும்,
ஏதமற வாழ்க வினிது.

கற்பகவிநாயகர் செந்தமிழ்க்கலாசாலைப் போதகாசிரியர் ஸ்ரீ கோபாலையரவர்கள் எழுந்து சபாநாயகரவர்கட்கும் வித்துவான்கட்கும் சபையோர்க்கும் வந்தனங்கூறி புஷ்பஆரம் சந்தனம் தாம்பூலம் கொடுத்தார்கள். 10மணிக்கு நிறைவேறிற்று. வந்திருந்த எல்லாருக்கும் உபசரணை நன்கு நடந்தது.

மறுதினம் ஆடிமீ 5தேதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மறுபடியும் சபை கூடிற்று. சபையார் விருப்பப்படி மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனாதிபதியாகஇருந்து முன்னுரையாகச் சில கூறியபின், குன்றக்குடி ஸ்ரீ விசுவநாத சாஸ்திரியவர்கள் 'பகவத் பஜநம், என்னும் விஷயத்தையும், ஸ்ரீ இராமசுவாமியய்யரவர்

கள் நற்சிநேகம், என்பதையும், ஆத்தங்குடி விவேக விளக்க வித்தியாசாலைப் போதகர் ஸ்ரீ சுப்பராமய்யரவர்கள் கற்பு, என்பதையும், செங்நெற்குடி வித்துவான் ஸ்ரீ வீமகவியவர்கள் 'கேள்வி, என்பதையும், ஷையார் புத்திரர் ஸ்ரீ 'சுப்பராமய்யரவர்கள் 'தெய்வமிகமேல், என்பதையும், ஸ்ரீ சேஷய்யரவர்கள் நாளு ஜீவபேதம், என்பதையும், கோனுபட்டு போஸ்டுமாஸ்டர் ஸ்ரீ ஆறுமுகம்பிள்ளையவர்கள் 'ஒற்றுமை, என்பதையும் முறையே இனிதெடுத்து உபந்யசித்தார்கள். பின்னர் ஸ்ரீ மூ. கதிரேசச்செட்டியாரவர்கள் 'மனத்தின் றன்மை, என்பதைப்பற்றி கம்பராமாயாணததிற் சில கவிகளைக்கூறி அதி 'நுட்பமான பொருள் விரித்துரைத்துச் சபையை உற்சாகப் படுத்திஞர்கள்.

முடிவில் சபாநாயகரவர்கள் ஒவ்வொருவர், பிரசங்கங்களின் தாரதம்மியங்களையும் அவ்வவற்றிற் கேற்ப எடுத்துக்கூறி அவ்வவற்றின் நயங்களையும் பாராட்டிப்பேசி முடித்தார்கள்.

அப்பொழுது, ஸ்ரீ ரே. இராமமூர்த்தி யையரவர்கள் அடியில் வரும் வாழ்த்துக்கவியைக் கூறிஞர்கள்.

சந்தமா ருயர்ஞான சம்பந்த நற்சபைச் சீர் தழைத்து வாழி
வந்தவா வுடனிருந்து கேட்டுமகிழ்ந் திடுமறிஞர் வாழி யான்ற
சிந்தையோ டிவணடைந் தூதலைமைபெறுபுலவனெனுஞ்சீர்த்திவாய்ந்த
கந்தசா மிக்கவிஞன் வாழியுலகெவையுமிகக் களித்து வாழி.

புஷ்பசந்தன, தாம்பூலாதிகளால் யாவரும் உபசரிக்கப்பெற்ருர்கள். இச்சபைக் காரியதரிசியும் கற்பக விநாயகர் செந்தமிழ்க் கலாசாலைத் தமிழ்ப்போதகரும் ஆகிய ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் சபாநாயகரவர்கட்கும், வித்துவான்கட்கும சபையோர்கட்கும் நன்றிகூறிஞர்கள். அருட்பா பாராயணத்துடன் நிறைவேறியது. இங்ஙனம் சபையை நடத்தியவகையில் கோநகர் நகரத்தார்களின் சிரத்தையும் அன்பும் மிகம் பாராட்டற்பாலன. இறைவனருளால் நீடுவாழ்க.

## கொழும்பு

# ஞானபண்டிதன் சபை.

இச்சபையின்கண் நாளிது ௵ ஆடி ௴ ௨௰ (4—8—12) ஆதிவாரத்தன்று மாலை 6-மணி முதல் 9-மணி வரையில் ஸ்ரீ M. நாகநாதனவர்கள் அக்கிராசனத்தின் கீழ் பழ. கண. மு. சிதம்பரஞ்செட்டி யென்னு மாணக்கராலும் கரு. கண. அரு நடராசன் செட்டியென்னு மாணக்கராலும் (கேள்விமுயல்) யென்ற விஷயம் பிரசங்கிக்கப்பெற்று அதன்பின். ந. பழ. ந. கரு. அண்ணாமலைச் செட்டி யென்னு மாணக்கராலும் சுப. பெ. அண. கருப்பன் செட்டி யென்னு மாணக்கராலும் அபிப்பிராயங் கூறப்பெற்றது. இன்னும் இச்சபையானது மாதந்தோறும் நடைபெறும் எனத்தெரிகிறது.

---

ஸ்ரீமாந் எஸ். வேங்கோபாச்சாரியா ரவர்கள் காலஞ்சென்றார். மதுரைக்காலேஜ் தலைமை ஆசிரியராகிய இவர்கள் 17-7-12ல் திடீரென்று விண்ணுலகமடைந்தார்கள். 22 ௵ காலம் மிக்க கீர்த்தியுடன் இவ்வுயர்ந்த உத்தியோகத்தைக் கொண்டிருந்தார். 12 ௵ காலம் சென்னை யூநிவர்ஸிட்டி பெல்லோக்களி லொருவரா யிருந்தனர். 15 ௵ காலம் யுநிவர்ஸிட்டிப் பரீக்ஷாதி காரியாயிருந்தனர். கௌரவமுள்ள சபைகளிலெல்லாம் இவர்களுமொருவராயிருந்தனர். மாணாக்கர்கட்குப்போதிக்கும் திறமை நன்கு பெற்றவர். தம் கீழுள்ள உபாத்தியாயர்களிடத்து அன்பு பாராட்டி வந்தவர். இப்போதிவர்கட்கு 60 வயது ஆகின்றது. இவர்கள் பிரிவு மதுரை வாசிகளுக்கு மட்டுமல்ல. சென்னை ராஜதானியிற் கல்விநலம் உடையார் யாவர்க்கும் வருத்தத்தை விளைப்பதே யாகும்.

பத்திராதிபர்.